உளி - 7 | ஓசை - 12 | மே - 2024 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவு எண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர்:
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு:
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு:
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி:
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு:
ஆர்.பிரகாஷ்

இணையதள முகவரி:
padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| ஐ.தர்மசிங் | 4 |
| கதிரவன் வீ | 4 |
| தி.கலையரசி | 4 |
| கா.ரஹ்மத்துல்லாஹ் | 5 |
| கு. பிரபாகரதாஸ் | 5 |
| மகிழினி காயத்ரி | 6 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | 7 |
| ஜெகன் மோகன் | 7 |
| முகமது பாட்சா | 8 |
| தங்கேஸ் | 8 |
| கௌ.ஆனந்தபிரபு | 9 |
| ச.ஆனந்தகுமார் | 9 |
| பூங்கோதை கனகராஜன் | 10 |
| ஸ்.டென்னிஸ் | 10 |
| கிருஷ்ணா கணேஷ் | 11 |
| ச. இராஜ்குமார் | 11 |
| மகேஷ் சிபி | 11 |
| செ.வீரமணி | 12 |
| கீதா கபிலன் | 13 |
| மீ. யூசுப் ஜாகிர் | 13 |
| நேசன் மகதி | 13 |
| பன்னீர் செல்வம் | 14 |
| கவி. விஜய் | 15 |
| கோவை சசிகுமார் | 15 |
| கோ. பாரதிமோகன் | 16 |
| வி.வி.கலைச்செல்வி | 16 |
| தேனி முத்து பிரசாத் | 17 |
| தீபிகா சுரேஷ் | 17 |
| கா.வெங்கடேஸ்வரன் | 17 |
| மணி அமரன் | 18 |
| எஸ்.பிரேமதாஸ் | 18 |
| பா.சிவகுமார் | 18 |
| சங்கரி சிவகணேசன் | 19 |
| ஈஸ் | 20 |
| அனீஸ் அஹமத் | 21 |
| சந்துரு ஆர்.சி | 22 |
| ரா.ராஜசேகர் | 23 |
| மெஹராஜ்பேகம் | 23 |
| இரா. மதிராஜ் | 23 |
| செ.ரா.கிருஷ்ணகுமாரி | 24 |
| செ.புனிதஜோ | 24 |
| நிஷா ராஜேஷ் | 25 |
| ஆ.சார்லஸ் | 26 |
| த. ரவீந்திரன் | 26 |
| த.முருகன் | 26 |
| கரிசல் கானம் | 27 |
| குமரன் விஜி | 28 |
| வளவன் கரிகாலன் | 28 |
| வி. மைக்கல் கொலின் | 29 |
| கதிரிளவன் இரவிக்குமார் | 30 |
| நித்யா | 30 |
| தமீம். அசாருதீன் | 31 |
| மைக்கெல் ஆல்பர்ட் | 32 |
| சாய் மீரா | 33 |
| கோவை புதியவன் | 34 |
| குளோரிசக்தி | 34 |
| அன்பழகன்ஜி | 34 |
| ஜா. பிராங்க்ளின் குமார் | 35 |
| ஆத்மாஜீவ் | 35 |
| பாபு | 35 |
| மணிசங்கர் | 36 |
| ஸ்ரீவி.முத்துவேல் | 36 |
| லக்ஷ்மி | 37 |
| ஹைக்கூ ரகுமான் | 38 |
| கவிதைச் சிறுவன் | 38 |
| ச. முகிலன் | 39 |
| சசிகலா திருமால் | 39 |



கைம்பெண்ணின் கூந்தல்
அடிக்கடி ஊசலாடுகிறது
அட்சதை பூ...

● ஜ.தர்மசிங்

தங்கையின் விரல் நுனிகளில்
மருதாணி குவியல்
உடைந்த முருங்கை மர நுனியில் சாண குவியல்
தங்கையோ முருங்கையோ
அம்மாவின் கருணை ஒன்றுதான்

● கதிரவன் வீ

நான் இல்லாத உலகம்
உனக்கு எப்படி இருக்குமென
அறிந்து கொள்ள
ஆதங்கமாகத் தான் இருக்கிறது
அதற்காகவாவது
எனது இன்மையின் பின்புறம்
ஒளிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்
ஆனால்
ஒரு வளர்ப்பு நாய்க்குட்டி
பிறந்தது முதல்
தான் கிடத்தி வைக்கப்பட்ட
மெல்லிய துகிலைத் துறக்க மனமின்றி
எங்கு சென்றாலும்
கவ்விக் கொண்டு திரியுமே
அது போலத்தான்
இன்மைக்கான உலகிலும்
உன்னை ஏந்தியபடி
உழல வாய்த்திருக்கிறது
என் காதலுக்கு.

● தி.கலையரசி.



எதிரிகளைப் பிறகு பார்க்கலாம்.
துரோகிகள்
எப்படி உருவாகிறார்கள் என்று
தேடத் துவங்கினால்

அதன் முதற்புள்ளி
என்னிலிருந்துதான் ஆரம்பிக்கிறது.
என்னுடைய
எந்த நேரத்துச் சிரிப்போ மகிழ்வோ
அவனுக்குள்
துரோகத்தின் விதைகளைத் துப்பியதோ
தெரியவில்லை

ஒரு பசி நேரத்தில்
அவனிருப்பதை நினைக்காமல்
நான் மட்டும்
தனியாய் எதையாவது சாப்பிட்டிருக்கலாம்.
“உனக்கு என்னப்பா?”
என்று நகைச்சுவையாய் நான் பேசியது
எனக்குத் திமிரென்ற எண்ணத்தை
ஏற்படுத்தியிருக்கலாம்.

துரோகம் என்னவோ பெரியதுதான்.
அதை விதைத்து வளர்க்கும் காரணிகள்
மிகமிகச் சிறியதே.
கவனிக்கத் தவறிய பால்
திரிந்து போவதைப் போல்
அன்பிலிருந்தே எழுகின்றன துரோக அலைகள்.
எதிரிகள் சண்டையிடுவர்
துரோகிகள் விழுங்கிவிடுவர்.

● கா.ரஹ்மத்துல்லாஹ்

நடக்கத்தொடங்கினேன்
வழியறியாதவனாக...
எடுத்துவைத்த ஒவ்வொரு அடிக்கும்
தடைகள் ஆயிரம்...
கடந்துவந்த பாதையெங்கும்
கற்களும் முற்களும்
பாதங்களை பலமுறை
முத்தமிட்டன...
இதற்குமேல் முடியாது என
முடிவெடுத்தும்
முணுமுணுத்துக்கொண்டே
மூச்சிரைக்க
முன்வைத்த கால்கள்...
கொஞ்சம் ஓய்வெடுக்க
திரும்பிப் பார்க்கின்றேன்...
சற்று உயரத்தில் நான்.

● கு. பிரபாகரதாஸ்



நிறங்கள்
கூடியிருந்த
வானவில்லில்
இறைந்து
கிடந்தது
இறந்த காலச்
சொற்களின்
வைபவம்

கண்ணாடிப்
போத்தலில்
மீதமிருந்தது
வேறு எதன் மீதும்
இல்லாத தொரு
தனிக்கவனம்

ஆய்வகத்தின்
எலிகளுக்கு
உப்பியிருந்தது
வயிறு
கடைசிப் பசியால்

Tan A வும்
Tan B யும்
மங்கலாய்
நினைவில் இருக்கிறது

வியர்வை
வழியும்
நீர்ச் சொட்டலில்
ஊசலாடிக்
கொண்டிருந்தது

குவிலென்ஸ்
கதிர்களின்
ஒளிவட்டம்

அல்லிவட்டமும்
புல்லிவட்டமும்
இப்போது
நன்றாகப் புரிகின்றதென்று
மணிமேகலை
டீச்சரிடம்
சொல்ல ஆசைப்படும்
அவள்

பருத்திக் காட்டில்
இருக்கிறாள்

உயிரியல் பிரிவு
முதல் மதிப்பெண்
அ. வெண்ணிலா

● மகிழினி காயத்ரி



"நெஜம்ம்ம்மாவா?" என்றும்
"எனக்காகவா?" என்றும்
அந்த வார்த்தைகளை
இறுக்கியணைக்கும் அழுத்தத்தோடு
நீ வினவும் அழகிற்காக
சிலிர்க்கும் வான்கோழி இறகென
புருவம் உயர்த்தி
விழி மலர்த்தும் அழகுக்காகவே
உனக்கான ஏதோவொன்றை
நீ எதிர்பாரா தருணத்தில்
செய்து முடித்து
உன் முன் நிற்பதையே
வழக்கமாக்கிவிட்டேன்...
எனக்காக
அந்த வார்த்தைகளை உச்சரி
அது போதும்!

● வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்

ஆழியின் இரைச்சலில் மௌனமாய் அடங்கிடும்
கடற்கரை நுரைகள்...

பச்சையக் காட்டுக்குள் ஆந்தையின் அலறலில்
அடங்கிடும் அமாவாசை இரவு...

ஊர்ந்திடும் பல்லியின் நாக்கின் பசையினில்
மௌனமாய் அடங்குது மரக்கிளை பூச்சி...

சூரிய வெப்பத்தில் மௌனமாய் நகர்ந்து நிலவுக்குப்
பின் மறைந்திடும் மேகம்...

காரிருள் வந்ததும் கண்ணின் ஒளி குறைந்து
மௌனமாய் அடங்குது இவ்வுலகு...

புற வழிச் சாலையில் மண்ணோடு மண்ணாய் மக்கிடும்
பச்சையக் காடு.

● ஜெகன் மோகன்



அடர் திரவத்தில் மிதந்து கொண்டிருந்த ஒன்று
காற்றைப் பிடித்து வெளி வரும்போது
உதிரத்தில் உணவைப் பிரித்து
முலைகளில் தேக்கி வைக்கிறாள் ஒருத்தி...

மழைக்காலக் கருணை
வடிவம் எடுத்துக் கொள்கிறது கோடைக்
காலத்திலும்...

நிகழ் காலத்தை
எதிர்காலத்திற்கென்று சமைக்கிறவள்
ஏழு வண்ணங்களாய்
தன்னையுடுத்தி அலங்காரம் செய்கிறாள்...

ஒரு புன்னகையை வாங்க
பத்து மாதங்களாகச் சிறைக்குள் இருந்தவள்
வெளி வரும் போது
ஓர் குழந்தை அவளை அன்புடன் அழைக்கிறது,
“அம்மா”

● முகமது பாட்சா

கடலும் மீனும் வேறு வேறல்ல
கரையாத கடலின் திடமே மீன்

சுவடிகளும் செதில்களும் வேறு வேறல்ல
எழுதாத இரகசியங்களின்
நீர்ச்சுவடியே செதில்கள்

அன்பும் வெறுப்பும் வேறு வேறல்ல
பரிமாறப்படாத நேசத்தின்
உறை திடமே வெறுப்பு

காதலும் சாதலும் வேறு வேறல்ல
மறுதலிக்கப்பட்ட இதயங்களின்
கடைசி புகலிடங்களே
சாதல்

கடவுளும் சாத்தானும் வேறு வேறல்ல
மனிதனை மன்னிக்காத
ஆதி கடவுள்களே சாத்தான்கள்

நீயும் நானும் வேறு வேறல்ல
கண்ணாடியில் தெரியும்
என் முகத்தை
வேறு பிம்பம் என்று நினைத்து
விலகி செல்பவனே
நீ

● தங்கேஸ்



தவளையை
உங்களுக்குப் பிடிக்குமா?
சொர சொர தோலும்
கரடுமுரடான உடலும்
துருத்திக்கொண்டிருக்கும்
கண்களோடுமிருக்கிற
அதை எனக்குப்பிடிக்கவில்லை.
குரலும் கூட ரசிக்கும்படி
இல்லை.
பசை நாக்கை நீட்டி
இரையை அசைபோடுவது
அத்தனை அழகாயில்லை.
சிலநிமிடங்களுக்கு மேல்
பார்ப்பதற்கு தவளையிடம்
என்ன இருக்கிறது?
ஆனால்
இப்படி நாம் அதை
வெறுப்பது
அதற்குத்தெரியாது.
அட...
அருவருப்பாய்
இருக்கிறோம் என்பதுகூட
அதற்குத்தெரியாது.
நாம்தான் எதிலுமொரு
முன்முடிவை வைத்துக்கொண்டு
அங்குமிங்கும் தாவிக்கொண்டிருக்கிறோம்.
அந்த தவளையைப்போல.

● கௌ.ஆனந்தபிரபு

விடாமல் தண்ணீர் ஊற்றி
எரிக்கும் கோடையில்
வரவேற்பறையின் ஓரமாய் அமர்ந்திருந்த தொட்டிக்குள்
இன்று பூக்கத்தொடங்கிய
ரோஜாவைப்பற்றி மறக்காமல்
எல்லோரிடமும் சொல்லி விட்டேன்...
இந்த அடுக்குமாடிக் குடியிருப்பிற்கு
அஸ்திவாரம் தோண்ட கொத்தாக சில
மரங்களை கொன்றதை மட்டும்
மறந்து போய் கூட யாரிடமும்
சொல்வதில்லை

● ச.ஆனந்தகுமார்



தூக்கம் கண்களிலிருந்து
விழுதாகத் தொங்குகிறது

தொடங்கிய நாளை
நாளை பார்க்கலாமென்று ஒரு புத்தகத்தைப் போல
மடக்கி வைக்க முடியாமல்

பகல் ஒரு பூவைப் போல விரித்த
வெளிச்சத்தை

அதே கண்களால்
பருகுகிறேன் இன்னும் கொஞ்ச நேரமென

மழலையாகி மீண்டும் தூங்கக் கொஞ்சும்
தூக்க விழுதுகளை வேரூன்ற விடாமல்
சமையல் ஆட்கொள்கிறது

● பூங்கோதை கனகராஜன்

கல்லில் பட்டுத்தெறிக்கும் நீர்த்துளிகள்
மின்குமிழ் மீது சூரியனை வரைகின்றன...

கல்லறைத் தோட்டம் படியுங்கள்
உயிரும் மறைந்திருக்கும்...

ஜோதிடன் வீட்டில்
மாப்பிள்ளைப் படம் பார்க்கும்
முதிர்க்கன்னி...

அமரர் ஊர்தியில் உயிரோடு இருக்கின்றன
உயிரெழுத்துக்கள்...

முக்கோணங்கள் ஒட்டிய ஐஸ்குச்சி
சிறுவன் வீட்டு அலமாரியில்
அழகிய கிறிஸ்மஸ்மரம்...

கடவுள் வந்துபோகும் பாதை
இந்த வீட்டுச் சுவரில் சின்ன ஓட்டை...

உயிர்மெய் எழுத்து ஒன்றை
உச்சரிக்கும் மாணவன்
வகுப்பறையில் கூவுகிறான்...

கடவுளைப் பார்த்ததும் நன்றி சொல்லுகிறேன்
எழுப்பிய ஏதோவொரு பறவைக்கு...

பழுதடைந்த அலாரம்

அதனால் என்ன
பறவை சத்தம் கேட்கிறது...

சுற்றுலாத் துறை அமைச்சர் வீட்டில்
கூண்டுக்குள் பறவைகள்...

● ஸ்.டென்னிஸ்



## இருளின் பாஷை...

நீந்திக் களிக்கும் கருவறைக் குழந்தைக்கு
இருளின் பாஷை
அம்மா...

பிழைக்க வழிவிடாத அரவாணிகளுக்கு
இருளின் பாஷை
வரவு...

உழைத்துக் களைத்து வியர்வையில் உரமேறிய
உடல்களுக்கு இருளின் பாஷை

உறக்கம்...

காதலில் திளைக்கும்
காதலர் கண்களுக்கு இருளின் பாஷை
கனவு...

வெம்மையின் கொடுமையில்
வெம்பித்தவிக்கும் அத்துனை உயிர்களுக்கும்
இருளின் பாஷை
ஆசுவாசம்...

● கிருஷ்ணா கணேஷ்

வீட்டு கடன்
மளிகை கடன்
வாகன கடன்
அக்கா தங்கை கல்யாணம் குழந்தை சீர் கடன்
பாட்டிக்கு வைத்தியம் என
எல்லாம் வந்து தொலைக்கும் அவனது கனவில்
வாலிபத்தில் வரவேண்டிய கனவுகள் மட்டும் இன்னும்
வந்து தொலையவே இல்லை...!!

● ச. இராஜ்குமார்

கசாப்புக் கடையில்
கட்டி வைக்கப்பட்டிருக்குமிந்த
ஆடு
கழுத்துக் கயிறுடன் போராடுவதை விட்டுவிட்டது
கதறும் சப்தத்தையும் நிறுத்திக் கொண்டது
மரணத்தின் நெடியை முகர்ந்துகொண்டே
அசைபோடும் ஆட்டின் முகத்தில்
அத்தனை சாந்தம்

● மகேஷ் சிபி



இரவும் பகலும் மட்டுமே
இருந்த தினங்களில்
உறவுகளோடு
கதைகள் பேசி
களித்திருந்தோம்

முன்னிரவிலேயே
உறங்கப்போனோம்

மின்சாரம் வந்து
ஆழ்ந்த உறக்கத்தின்
சாளரங்களையும்
கதவங்களையும்
அடைத்து தாழிட்டது

வானொலி பெட்டிகள்
வந்தடைந்ததும்
ஒருவரிடம் ஒருவர்
பேசுவதை
குறைத்துக்கொண்டோம்

இசையிலும்
பாடல்களிலும்
ஒலிச்சித்திரங்களிலும்
உறக்கத்தை
விரும்பி தொலைத்தோம்

பிறகு வந்த
தொலைக்காட்சி
உறக்கத்தோடு
கதைகளையும்
திருடிக்கொண்டது

கனவுகளை பறிகொடுத்து
படுக்கைகளை துறந்து
உறங்காத விழிகளோடு
நள்ளிரவு வரை
இருக்கைகளில்
கட்டுண்டு கிடந்தோம்

இறுதியாகத்தான்
கைபேசிகளை
கொடுத்தார்கள்

ஆழ்ந்த உறக்கத்தின்
கடைசி அத்தியாயம்
அப்போதுதான்
எழுதி முடிக்கப்பட்டது

● செ.வீரமணி



வானத்தின் அழுகை
மழையாகிறது...

பூமியின்
அழுத்தமே பூகம்பம் ஆகிறது...

கடலின் சீற்றமே
சூறாவளியாய்
உருமாறுகிறது...

மனிதன் மட்டும்
எதையும் தாங்கும்
சிலுவையாக
வாழ்வதென்பது.

ரோஜாவின் அழுகை
அத்தராய்
வாசம் கொள்வது
போன்றது...

● கீதா கபிலன்

ஒவ்வொரு நாளும்
ஒருவரை இழந்து
தவிக்கிறது நாள்காட்டி...!!!

ஏதோ ஒரு நாளில்
ஒருவரை இழந்ததற்கா
ஒவ்வொரு நாளும்
வருந்துகிறாய்...?

● மீ. யூசுப் ஜாகிர்

அழகர் ஆற்றில் இறங்க
கன்னத்தில் போட்டுக்கொண்டார்
மணல் வியாபாரி!

● நேசன் மகதி



## அப்படி ஒன்றும் தனிமை உகந்ததில்லை...

அந்தத்
தனிமை எனக்கு
அறவே பிடிக்கவில்லை...

போர்க்கால
ரணங்களை கொடுக்கிறது...

என்னிடம்
நான் மட்டுமே
பேசிக் கொண்டிருக்கும்
மோசமான
சம்பவங்கள் நிறைந்தது...

அந்தத்
தனிமையில் என்னை
பற்றி நான் பெருமையாக
புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன்...

அந்தப்
புகழை விரும்புகிறது தனிமை...
சரி இல்லை...

நிதர்சனங்களை
என்னிடம் சொல்லாத
நான் ஒன்றும்
சாதாரணமானவன் இல்லை...

என்னுடைய சுயநலத்திற்காக என்னை
நான் ஏமாற்றிக் கொள்கிறேன்...

அது எனக்கு பிடித்திருப்பதாக
அந்த தனிமை என்னை
நம்ப வைக்கிறது...

என் மிகையான குறைகளை
நான் இனம்
சுட்டிக் கொள்ள விரும்பவில்லை...

ஒரு
தாழ்வு மன வட்டத்திற்குள்
என்னை
வைத்திருக்கிறது அந்தத் தனிமை...

ஆரோக்கியங்கள்
என்னை விட்டு அகல்கிறது...

தனிமையில் நிம்மதி கிடைக்கும்
என்று சொல்லிக் கொள்வதெல்லாம் பிதற்றல்...

நம்முடைய
நிம்மதி எடுத்துக் கொள்வதே
தனிமையின் தலையாய வேலை...

தனிமையிடமே
தனிமையை கொடுத்து விட்டு திரும்புகிறேன்...

● பன்னீர்செல்வம்



## பூ உதிரும் ஓசை

அறுவடை முடிந்ததும்
பழுத்த இலைகளை
நிலத்தில் உதிர்கிறது
மரம்.

வெற்றிடத்தை
பூக்களால் உருட்டியுருட்டி
நிரப்புகிறது காற்று.

பால்காரன் பால் பீய்ச்சிச்சென்றதும்
கன்றுக்குட்டியை
நாவால் நக்கும் பசு.

பூத்துக்காய்க்க மறுக்கிறது
வழமைக்கும் அதிகமாக
நீரூற்றி வளர்த்தசெடி.

மனம் இயல்பு நிலைக்குத் திரும்பியதும்
பூ உதிரும்
ஓசையைக் கேட்கமுடிகிறது.

கவலையோடு அமர்ந்திருக்கிறேன்
என்மேல் பூக்களை உதிர்க்கிறது
மகிழம் மரம்.

● கவி. விஜய்

திசையறியாத காற்றில்
கலந்து வருகின்ற பெருமூச்சொன்றின்
பேரிறைச்சல்தான்
சுட்டெரிக்கும் தனலாய்
கொழுந்து விட்டெரிகிறது
பசியின் ஜுவாலை.

உரத்தொலிக்கின்ற
அருவியின் இறைச்சல்
பள்ளத்தாக்கில்
நிரம்பி வழிகின்ற திரவத்தில்
திசையறியாத வேகத்தில்
எதர்திசை ஆக்ஸிஜனை நோக்கி
நகர்கின்றன எதிர் மீன்கள்.

தனல் கக்கும் சிகரெட் புகையை
உள்ளிழுத்து வெளியிடுகையில்
மதுக்கிண்ணத்தில்
நிரம்பி வழிகின்றது
வெற்றுக் காகிதத்தில்
கவிதையெனும் கல்வெட்டு

மது அருந்துவதும்
புகைபிடிப்பதும் உடலுக்கு கேடு...

● கோவை சசிகுமார்



## கஸல்

மன்னித்துத்தான் ஆகவேண்டும்
தனது பார்வையால்
இதயமொன்று வதைபடுவதை
உணராதிருப்பவளை

ஆனால் வேதனைக்கு
வாய் முளைத்துவிடுகிறபோது
சாபத்தை நானென்ன செய்வது?

இல்லாமலிருந்திருக்கலாம்
கண்கள் எனக்கு
அல்லது பார்வையேனும்

காயத்தை காயத்தால் ஆற்றுப்படுத்த
இருக்கவேண்டும் முதலில் இதயம்
அதுவோ போயிற்று
இரக்கமற்றவளின் பின்னால்

காதலே
கருகும் இதயத்தோடு
நீ என்னை நிறுத்தியிருப்பது பாலையிலெனில்
எவளின் பின்னால் போயிற்று
உன் இதயம்?

● கோ. பாரதிமோகன்

## கொக்கரக்கோ

கடைசியாக இருந்த இரண்டு குஞ்சுகளையும்
வரிச்சாளிக்கு வாரிக் கொடுத்திருந்தது
சிறுவித்து வெடைக்கோழி

வேட்டையில்
இது சகஜம்
பசிக்கு பசியைவிடவும்
வேறு காரணம் இருக்கப் போவதில்லை என்பது
எல்லோராலும் ஏற்கக் கூடியதே.

இரண்டு நாட்கள் குஞ்சுகள் நினைப்பில்
கேவித் திரிந்தது
இப்போது குப்பை அணைகிறது.

ஆம் எல்லா வெறுமைக்கும்
எப்போதும் ஒரு அணைப்பு
தேவையாகத்தானிருக்கிறது.

● வி.வி.கலைச்செல்வி



மெலிதாக வரையப்பட்ட
அந்த கோட்டிற்கு
பின்புறத்தில்
முகமூடிகள் களையப்பட்ட
மனிதர்களுடன் இறந்தகாலம்

கோட்டிற்கு முன்புறத்தில்
புதிதாய் முகமூடிகள்
அணிந்த மனிதர்களுடன்
வரவேற்கும் எதிர்காலம்

கோட்டிற்கு நடுவில்
நிகழ்காலத்தில் நான்

இதோ
என் பாதத்தை
முன்னோக்கி நகர்த்துகிறேன்

என் கையிலும் ஓர் முகமூடி...

● தேனி முத்து பிரசாத்

எனக்கு பிடித்த நானும்
உனக்கு பிடித்த நானும்
வெவ்வேறாயினும்

முட்டி மோதி முளைத்து
வேர் விட்டு
மரமாகி
பூத்துக் குலுங்கும்
இந்தக் காதலின் சூத்திரம்
என்னவாயிருக்கும்.

● தீபிகா சுரேஷ்

அண்டம் கொள்ளாத மௌனங்களைக்கூட
அடக்கியாளத் தெரிந்துகொண்டு

ஒரு மின்மினிப் பூச்சியிடம்
சலனப்பட்டு தோற்கும்
இரவுக்கு

அப்படியே...
ஆண் வர்க்கத்தின் சாயல்

● கா.வெங்கடேஸ்வரன்



## பித்து நிலையின் பிள்ளையார் சுழி

போதும் போதும்
விடைபெறுகிறேன்
என் பிச்சைப்பாத்திரம்
நிரம்பி விட்டது.

உன் வாசலில் என்னைப்போல்
இன்னொரு யாசகன் இப்போது.

அறிவேன்
யார் யாரோ
யார் யாரிடமோ மண்டியிட்டு இரஞ்சுவது
இந்த துளி அன்புக்குத்தானே.

வெற்றுத் தட்டில் விழும்
சில்லறை சத்தமாய்
இனி ஒவ்வொரு நாளும்
காதுக்குள் எதிரொலிக்குமே
பார்த்து பார்த்து நீயளித்த
பிரியத்தின் குரல்.

அதில்தான் சாகாமல்
பார்த்துக் கொள்ள வேண்டும்
என்னை நானே.

● மணி அமரன்

வெறுங்கையில்
உணவூட்டும் குழந்தையிடம் பசியாறுகிறது
தாய்மை...!

● எஸ்.பிரேமதாஸ்

## இலைமறை இலைகள்

பச்சையம் தீர்ந்து
மஞ்சளாக வெளுத்து
பற்றுதலை விடுத்து
காற்றில் ஊசலாடி
மண்ணை மென்முத்தமிட்டு
சருகாகி உரமாகும்
இலைகளின்
மரங்களெல்லாம்
போதி மரங்கள்
இல்லை

● பா.சிவகுமார்



அன்றாடங்கள் யாவும்
நிகழ்தேறுகின்றன,
மறுக்க முடியாத
வேலைகளை முடித்து
ஒதுக்க முடியாத
தேவைகளை இணைத்து...

நாளை பார்க்கலாமென்ற
அலட்சியத்தைக் கடந்து
இன்றை இன்றே முடித்து
நாளைய பொழுதை
எதிர்கொள்ளும்
என் பிரார்த்தனையில்

நேற்று ஒரு தரிசனம்
இன்று ஒரு கடவுள்
நாளை ஒரு பித்து...

விதிகளின் கட்டுக்குள்
பெட்டிப் பாம்பாகாமல்,
கழுகாய் நிமிர்பவளுக்கு
பாம்பு (விதி) இரையாக

முயற்சியும் கடமையையும்
இரட்டைச் சிறகுகளாக
விரிகின்றன...

நஷ்டத்தைக் கடந்து
இஷ்டம் போல் விரைந்திட
மூச்சிரைக்க வைக்கிறது
ஓடி வந்து காலத்தின் முன்
நிற்பதற்குள்
ஒவ்வொரு கணமும்...

ஒவ்வொரு நிமிர்தலுக்கும்
ஒவ்வொரு பாம்பை
பிடித்து தருகிறது காலம்...

● சங்கரி சிவகணேசன்



## நேர்மை கா...

காக்கையொன்று
தன் கூர் வாள் தீட்டுவதாய்
சொண்டு தேய்த்தது
சிதறிய ஞாலத்தின் நேர்மைகளை
கூர் செய்தது
தனக்கென ஒரு பாணியில்
கொள்கை கொண்டது
தர்மத்தை காதல் செய்தது
கா என்றது

பிடரியைச் சுற்றிய சனியை
கவனியென்றது உலகு
பரந்த யாக்கை அடித்து
தானோ சராசரியில்லை என்றது அலகு
சனி இறங்கியது தெரிந்தும்
தீயது கடந்தது,
சாவு உறுதியேனும்
தீவினை எதிர்த்தது

உலகும் எதிர்த்தது
மழையும் நனைத்தது,
வெயில்கள் வாட்டி
வாய்மைகள் இழந்தது

உணர்ச்சிகளின் வரம்புகள் உடைந்தன
ஊர் இனங்கள் உடன் இனங்களென
எல்லாம் கைவிட்டன
காக்கை கிடங்கு விழுந்தது
கிரகத்தின் சாயலை நினைத்து தேம்பி ஒடுங்கியது

கெட்டது கண்டது
கடும் துன்பத்தை பார்த்தும்
இணை நிர்கதி உணர்ந்தும்
இலகி நொந்து காறியது

இனி ஒரேயொருத்தியேயேன மனதில்
மெழுகு வத்திகளை சுமந்து
கா என்றது அதுவே
பிரபஞ்சத்தின் கடைசி காதல்
நேர்மைக் கர்ஜனையுமானது

● ஈஸ்



## வேர் சொல்

வெளியே தெரியாத
வேராய் இருக்கிறேன்...
செடியே... நீ
வாடிப்போகாமல்
பூக்களை சுமப்பதற்காய்...

பரவலாக பரவிக்கிடக்கிறேன்
மண் இறுக்கும்
வேதனையை நீ
அறியாய்...

நீ
வெயிலில் உக்கிரத்தில்
காயும் போதெல்லாம்
நான் மழை வேண்டி
தவமிருப்பதை நீ அறியாய்...

இரத்தத் தண்ணீரை
உறிஞ்சிக்கொண்டு...
உனக்குள் உயிரூட்டுவதை
நீ அறியாயா?...

வலியை வலிய வாங்கிடினும்
பூமியை இன்னும்
இறுக்கமாக பற்றுகிறேன்...
செடியே உன்னை
சிரமத்தில் ஆழ்த்த விடமாட்டேன்...

காற்று கைகுலுக்கி உன்னுடன்
கவிதை வாசிக்கிறது...
மனித முகங்கள் உன்
பூ பிள்ளைகளைப் பார்த்து
பூரிக்கின்றனர்...

சிலர் களவாடிச்சென்று
உச்சந்தலையில் ஒப்பாரிகையில் ஏற்றிக்
கொண்டாடுகின்றனர்...

மழைத்துளிகள்
முத்தமிடுகிட்டு
கும்மாளமிடுகின்றன...

செடியே இலைகளில்
சேகரமாகி வடியும் ஒவ்வொரு
துளியும் என் மீது படும்போது
என் அவஸ்தைகளைக் கண்டு
ஈர இதயத்தோடு
கண்ணீர் வடிப்பதாகவே
நினைக்கிறேன்...

அந்த நினைப்பில்தான்
நித்தமும் செத்து செத்து
பிழைக்கிறேன்...
நீ சுவாசிக்க...
செடியே புரிந்துகொள்...
நாம் மரமாவோம்...

● அனீஸ் அஹமத்



வரிசையிலிருந்து
தனியே விலகிச்செல்கிறது
எறும்பு

கூட்டத்திலிருந்து
தனியே பிரிகிறது
நெடுந்தூரப் பறவை

அலைகளிலிருந்து
தனியே அமிழ்கிறது
ஒரு சிற்றலை

மந்தையிலிருந்து விலகி
தனியே நடக்கிறது
செம்மறி ஒன்று

தாயிடமிருந்து தனித்து
இரை கொத்துகிறது
கோழிக்குஞ்சு

பார்ப்பதற்குள்
சேர்ந்துவிட்டிருக்கின்றன
அனைத்தும்

நினைத்தபோது பிரியவும்
சேரவும் முடிகிறது இவைகளால்

நினைத்துக்கொண்டே இருந்தாலும்
கூட்டத்திலிருந்து நெடுநேரமாய்
எழ முடியாமலிருக்கிறேன்

● சந்துரு ஆர்.சி



அப்படி என்ன இருக்கப்போகிறது
காதல் கவிதைகளில்
சொற்களின் கூடுகளைத் தவிர

கூடுதலாய்
மறந்துவிட்ட
வாழ்த்து நாள்களையும்
வசவு நாள்களையும்
சொல்லாத மன்னிப்பில்
அடங்கி இருக்கும்
அதைவிடவும்...

“அடப்போ நீ அப்படித்தான்...”
குறுஞ்செய்தியிலும் நேரிலும்
சொல்வதைவிடவும்...

அப்படி என்ன இருக்கப்போகிறது
காதல் கவிதைகளில்
சொற்களின் கூடுகளைத் தவிர

ஊமை மொழிதான்
உணர்வின் பாஷை
சொற்களைத் தவிர்த்து
மொழியாடுவோம் வா

● ரா.ராஜசேகர்

ஒரு மழைக்காலத்து
கவிதையை போலவே
வெயில் காலத்திற்கு
அவ்வளவு மகிழ்ச்சியாக
எழுத முடியவில்லை

காதலைப் போன்றது
மழை
தனிமையை போன்றது
வெயில்

உண்மை
உரைக்கத்தானே செய்யும்

● மெஹராஜ்பேகம்

பிடிக்கப் பட்ட மீன்களின்
கண்களில்
இன்னும் தெரிகிறது
கடல்

● இரா. மதிராஜ்



கடைசி மிடறு தேநீரில்
இனிப்பை வைத்திருக்கிறது
என் கோப்பை

விழித்துக் கொண்டிருக்கும் போது
ஒலிக்காத கைப்பேசி
தூங்குவதை மட்டும் எப்படியோ
தெரிந்து வைத்திருக்கிறது

விடுமுறை நாளில் மட்டும்
சரியாக அடித்து விடுகிறது
அலாரம்

கூந்தலை சீவிய பின்
கால்கள் முளைத்து விடுகிறது
இரப்பர் வளையங்களுக்கு

அடுப்பை கழுவிய நாளன்று
பொங்கி வழிகிறது
பால்

பரிதாபங்களின் பட்டியல்
மிக நீளமானது.

● செ.ரா.கிருஷ்ணகுமாரி

பரந்த வானத்தை
தன் ஒற்றைசிறகுகளால்
அளந்து பார்க்கத்துடிக்கிறது
பறவை

மிச்சமிருக்கும்
நிலத்தையும்
இணைக்கத் துடிக்கிறது
கடல் அலை

நேசப்பித்துக்குள்
ஒருதுளி பித்து
மிகுதியாகையில்
பெரும் பித்தாக்குகிறது
நேசம்

நான் கூட
இப்படியாகத்தான்
உன்னிடத்தில்

● செ.புனிதஜோ



சற்று முன்பு வரை
சர்வ சகலமும்
பேரழகாய்த்தான் இருந்தது
என் உலகில்...

பட்டாம்பூச்சியென
படபடத்து பறந்து
மகிழ்ந்து கொண்டிருந்த
என் சிறகுகளை
சிதைத்தது வரை...

பிறந்தது முதல்
பளிச்சிடும் புன்னகை
பூசிய முகத்திற்கு
முகமூடி தரித்திருப்பது
சிறிதும் அறியேனே...

குறுநகை களைந்து
குரோதத்தின் வாசலில்
வெகு விகாரமாய் வெட்டுப்பட்டேன்
வெற்றுடல் துடிதுடித்து
சட்டென அடங்குகிறது...

அதுவரை
ஆறுதலாய் சாய்ந்திருந்த தோள்களை கொண்டவர்
ஓர விழிகளில் மறைக்கப்பட்டிருந்த
விசமப் புன்னகை
கூர்மையான குறுவாளாய் என் புற முதுகை
பொத்தலாக்கி செல்கிறது...

இதோ சற்றே
மனதுக்கு நிறைவாய்
குறையில்லா அழகாய்த்தானிருக்கிறது..
எனக்கே எனக்காய்
நீங்கள் உருவாக்கிய
தூய துரோகத்தின்
சாயல் கொண்ட
என் அழகிய பலிபீடமும்...

● நிஷா ராஜேஷ்



## காத்திருக்கும் சிறுமி

சிறுமியை
ஓவியமாக தீட்டடிக்கொண்டிருக்கிறார்
ஓவியர்

தேநீர் அருந்தச் சென்றவர்
வரும்வரை,
பொறுமையாகக் காத்திருக்கிறாள்
சிறுமி,
ஓவியச் சட்டகத்தில்.

● ஆ.சார்லஸ்

தேடிச் செல்லும் வழியில்
தொலைந்த நதியின்
காலடியில் நெகிழி.!

● த. ரவீந்திரன்

குற்றத்தின் தண்டனை
குறையும் கூடும்.
பணத்தின் அளவு !

● த.முருகன்



விட்டு விட்டு வலித்த வலி
பிரசவகாலத்தை அறிவித்தது

அம்மா ஏதோ சொல்ல
ஓடிப்போன தம்பி
சுப்பம்மா வீட்டில் நின்றான்

போறுமய்யா...
இதோ அஞ்சு நிமிசத்தில
இந்த சோத்துப் பானையக் கவுத்திட்டு வாரேன்

காலைக் குத்துக்கால் வையும்
சொல்லியவாறே சீலை விலக்கி
அடிவயிறு தொட்டவள்
தலை திரும்பிடுச்சி
இன்னும் வலி நெருங்கல
அம்மாவிடம் சொல்லியது கேட்டது

அரை மணிக்கொருமுறை
கால் மணிக்கொரு முறையானது
வலி உயிர்விடும் உணர்வு

அவர்கள் பேசிச் சிரிப்பது
வலிப்பவளுக்கு எரிச்சல்
இரக்கமற்றுப் பேசிக்கொண்டிருக்கிறார்களே...

ஐந்து நிமிடத்திற்கொரு முறை
அறிந்திடாத வலி
விளக்கெண்ணெய் தொட்டு யோனி கிழித்தாள்

அரை அம்மணம் ஒன்றும்
அப்போது வெட்கம் தரவில்லை
அடிவயிற்றுச் சுமை இறங்கினால் போதும்

கைகளால் கரண்டை பிடிக்கச்சொல்லி
கீழ்நோக்கி தள்ளு
உன் சுமையை நீதான் இறக்க வேண்டும்
மரண வலிக்குப் பின்னே அடிவயிற்றிலிருந்து
யோனி கிழித்து நழுவியது
குவா குவா சத்தம்

தூக்கம் கண்கள் சொருக
தொடை தட்டிய சுப்பம்மா
நஞ்சு விழ வேண்டும் தூங்காதே...

ஆயிற்று எல்லாமென்றால்
அங்கணக்குழிக்கு நட மெல்ல
பானை வெந்நீர் கொதிக்க கொதிக்க

சுவரில் சாய்ந்து நில்லு
என் தலைமுடி பிடி...
தலையால் அடிவயிற்றில்
சுவரோடு வைத்து உருட்ட...

திறந்துவிட்ட நல்லியென
சாண்டை கொட்ட... பாதுகாப்பு சுவர் கரைந்து
தக்கைத் துண்டுகளாய்
தரை பரவ... குருதிப்புனல் ஓடியது

வெந்நீர் விட்டு உடல்கழுவி
காம்புகளில் அழுக்கெடுத்து
அதன்பின்னே தன்னை சுத்தமாக்கி

இரவு முழிப்பை பொருட்படுத்தாது
இன்முகமாய் இருந்ததென்ன
ஐம்பது ரூபாய் #சுதந்தரியத்திற்கும்
அரைப்படி அரிசி கால்படி உளுந்துக்குமா ?

மருத்துவச்சி என்ற பெயரை
யாருக்கும் தாரை வார்க்காது
நாந்தாமய்யா உன்னைப் புடுங்கிப்போட்டேன்னு
ஊரிலுள்ளவர்களிடம் கெத்து காட்டும்
சுப்பம்மாவுக்கு ஈடாகுமா ?

● கரிசல் கானம்



## பூமிக்கு ஏது கிழமைகள்

ஜோதிடம் பார்ப்பதில்லை
யாரையும் தொழ வேண்டிய அவசியமில்லை
இன்று சனி பிடித்துவிட்டதென
கோள்களை குறை கூறுவதில்லை
உன் ராசிக்கு
இன்று நீ வான் அட்சில் சுழல்கையில்
சுக்கை வாயில்போட்டுக்கொண்டால்
இரண்டு டிகிரி வெப்பம் குறையுமென
சொல்லும்
மூடனை ஏற்பதில்லை.
யாரிடமும்
தன் வாழ்க்கை எதிர்காலத்தில்
எப்படி இருக்குமென கேட்டு
நிர்வாண வாய் வார்த்தைக்கு மணிகணக்கில்
காத்திருப்பதில்லை
இந்த பூமியில்தான்
நீயும் பிறந்தாய்
பூமியில் பிறந்தும்
உனக்கு பூமியின் ஞானமில்லை.

● குமரன் விஜி

எப்போதும்போல
இயல்பாய்க்
கடந்துசெல்ல முடியவில்லை
அந்தத் தள்ளுவண்டியை!

நித்தமிருமுறை கடக்கும்போதும்
யதார்த்தமாய்த் திரும்பிப்பார்ப்பதும்
இஸ்திரி செய்துகொண்டே
மெலிதாயொரு புன்னகையைச்
சிதறியபடிக் கருமமே கண்ணாகத்
தன் பணியை
மீண்டும்
தொடர்வதுமாயொருவர்
இங்கே நின்றிருந்தார்!

யாரோ
எவரோதான்
ஆனாலும்
இந்தசில நாட்களாக அநாதையாக நிற்கிற
அந்த வண்டியைப் பார்க்கையில்
என்னவோ ஆகிறது
மனம்!

● வளவன் கரிகாலன்



**காலத்தின் பாடல்...**

உறைந்தே தான் போனோம்.

பிணந்தின்னி பேய்கள்
கூடி ஆடிய இடங்களெங்கும்
மனிதத் தசைகள்
தேடியலையும் நாய்கள்

அலை என எழுந்தும்
மீண்டும்
ஆழ் கடல் தேடி...
ஊழித்தாண்டவத்தின் உக்கிரத்தில்
காணாமல் போனது
ஓர் இனத்தின் குரல்

அஹிம்சை வாதிகளும்
ஜனநாயக காவலர்களும்
மனித உரிமை போராளிகளும்
ஆழ் துயில் கொண்டார்களோ
இல்லை
அழிந்தேதான் போனார்களோ?

உயிரற்று வீழ்ந்து கிடக்கும்
அன்னையின் மார்பில் பால் அருந்தும்
பச்சிளம் குழந்தை..


யுகங்கள் கடந்தும் மாறா வலியாக
காலங்கள் தோறும்
பேசும் மொழியாக...

ஒரு சிறுவன்
வீழ்ந்து கிடந்தான்.

கந்தக நெடி வீசும்
மண்ணில் இருந்து
ஒரு கள்ளிச் செடி
புதிதாக முளைத்து நின்றது.

திரும்பும் திசையெங்கும்
என்றும் மாறா
அதே புன்னகையுடன்
அவர் மட்டும்...

● வி. மைக்கல் கொலின்



ஏற்கனவே அர்ச்சனை தட்டுக்கு இறுபது
முன்னும் பின்னும் பெருங்கூட்டமான வரிசையில்
உடைப்பவனுக்கு தனியாக
கட்டியழ வேண்டுமாம் இறுபது
தேங்காயின் விலையே இறுபதுதான்
அந்த ஏழைக்கிழவியிடம்  அடித்துப் பேசிய பேரத்தில்
பதினைந்தாய் குறைத்ததில்
பெருஞ்சாதனை புரிந்ததாகவும்
பிழைக்கத் தெரிந்தவனாகவும்
எனக்குள் நானே பகட்டிக் கொண்டு
மீசை மயிரை முறுக்கிக் கொண்டேன்...
அது ஆண்மையின் அடையாளமாமே?
இந்த மீசையில்லா அர்ச்சகன் திருடியது
தேங்காய் விலையினும் இருமடங்கு..
ஏமாற்றப்பட்டதை உணரத் தொடங்குகையில்
எனது தேங்காயை உடைத்துக் கொடுத்தான்...
குடுமியை பிய்த்துத் தாருங்கள் என்றேன்
இத்தனை கூட்டத்தில் குடுமிதான் பிரச்சனையா என்ற
அவனிடம்
சற்றும் யோசிக்காமல் சட்டென சொல்லிவிட்டேன்
ஆமாம் எங்களுக்கு பிரச்சனையே
குடுமி மயிர் தான் என்பதை...

● கதிரிளவன் இரவிக்குமார்

முற்றிலும் உடைந்து போன நாளொன்றின்
அந்தி தான் அத்தனை
இருளையும் மொத்தமாகக்
கொண்டிருந்தது

சிலுவை மேல் மலர்ந்த
சிறுபூவென வாழ்க்கை
நகரும் நொடி ஒவ்வொன்றிலும்
ரணம் பூசி கரைகிறது

கண்ணீரின் காம்புகளைத்
தாங்கிய வேரின் கிளைகளில்
என்றேனும் கனியக்கூடுமென
நம்பித் தொலைக்கிறது
வாழ்வின் மிச்சங்கள்..

● நித்யா



## குடைமலர்

விரியத்தான்
இவ்வளவு காலம் காத்திருந்தது
குடை மொட்டு

திறந்துவிடுங்கள்
சிறகுகளை நனைக்கத்தான்
கூடைந்திருந்தது குடைப்பறவை

மழைவரும்போதெல்லாம்
பருவமெய்தி நீராடுகிறது
குடைக்கன்னி

வீடடைந்து வாசலில்
நிறுத்த கண்ணீர் சொட்ட
உன் கருப்பு உடை
துக்க அனுசரிப்பா?

நனைவதும்
அழுவதும்
பின் மலர்வதும்
நீ தன்னப்பிக்கை பூ !

வெயிலோடு ஊடல் கொண்டு
மழையில் கூடலாகும்
கருப்பு காதலி !

தேவை முடிந்ததும்
வாசலில் நிறுத்த
மனித கண்ணாடி நாங்கள்!

● தமீம். அசாருதீன்




ஓ

அண்ணாசாலை
சுரங்கப்பாதை
கைப்பிடித்து சாலை
கடத்திவிட்டது

குட்டி தேநீர் கடை
சந்துக்குள் நிழல்
ஒளிந்து கிடந்தது,
நினைவுகளும் தான்

நிழற்பட ஸ்டுடியோ
தேடியலைந்த போது
காப்பீடு கட்டிட சந்தில்
இருப்பது தெரிந்தது

ஆறு அடி அகல
கடையில் ஸ்டுடியோ
திருஷ்டிக்கு கூட
ஒரு புகைப்படமில்லை

முந்திரி பழத்தின்
கொட்டை போன்ற
வாகன சாவிகள்
இறைந்து கிடந்தது

உதிரி சாவிகள்
பழுதான சாவிகள்
சரிசெய்ய சில
ஆயிரங்கள் ஆனது

நூறு ரூபாய் வேலை
ஆயிரத்திடம் எடுபடாது
அலைய முடியாததால்
கேட்டு வைத்தேன்

அத்தனையும் அப்படியே
போட்டுவிட்டு வந்தார்
அறிந்ததை தேர்ந்ததை
ஆசையோடு அரங்கேற்றினார்

டஸ்ட்டர் சாவி
செய்ய தந்தவர் கத்த
அது பிழைப்பு
இது கனவு என்றார்

எல்லா பூச்சியும்
பாடுவதில்லை
பாட முற்படுவதோ
காலை தேய்த்தும் பாடும்

வெறும் தூறல்
ஏளனம் செய்த மழையை
புற்கள் கொண்டாடும்
என்றது புகைப்படம்

● மைக்கெல் ஆல்பர்ட்



வாழ்வின் ஏழு நிலைகளை
வேலியோர விஷ்ணுகமலம்
கொண்டு விளக்கிவிட்டாள்
அப்பத்தா

அற்புதம் அற்புதமென
அலாதிகளோடு அங்கும் இங்குமாய்
அம்மலரை கையிலேந்தி கொண்டாடுகிறேன்
அர்த்தம் அறிந்திடாமல்
ஓர் அறியாத வயதில்

இன்றோர் பருவத்தில்
நானே அறியா என் முகத்தை
எப்படி அறிவதெனும்
ஆராய்வில் அனுக்கரு துளைக்கிறேன்
பெருவெடிப்பில்
பிளவுற்றுக்கிடக்கிறதென் நான்

உங்களுக்காக வெளித்தெரியும்
நானொன்று
மனத்துணைக்காக கடைந்தெடுத்த
நானொன்று
எனக்கு மட்டுமே தன்னை காட்டும்
நானொன்று

இத்தனைக்கு மத்திமத்திலும்
தேடித்தேடி தொலைந்தெழுகிறேன்
நானறியாத
என் நானை கண்டெடுக்க
கற்றோர் கண்டவிடத்து
மற்றோர் கட்டவிழ்க்கா கலையொன்றை
கற்றறிகிற மனத்தோடு
நானறியாத என் நானை
தேடித் தொலைந்தெழுகிறேன்

● சாய் மீரா



குரங்கு வித்தை
குட்டிக்கரணம் அடிக்கின்றது
வறுமை

● கோவை புதியவன்

இணைந்து நடக்க
விரும்பி
அன்பின் கயிற்றை
மேல்நோக்கி வீசுகிறேன்
பிடித்துக் கொண்டால்
பற்றிக்கொண்டு
பக்கம் வருவேன்
இல்லையேல்
நம்பிக்கைத் தாங்கியில்
கயிற்றைக் கட்டி
இறங்கி வா
இறுதிவரை இணைந்தே
செல்ல.

● குளோரிசக்தி

**நிகழ்வுகள்**

வழக்கம் போலவே
முந்தய இரவிலும்
நட்சத்திரங்கள் கண்சிமிட்டின.
பாலருந்தியதும் இளங்கன்று
துள்ளிக் குதித்து விளையாடியது.
வினாடிகளுக்கும் நிமிடங்களுக்கும்
நடுவில் செங்குத்தாய் இருவிழிகள்
கண்ணடித்த வண்ணம்
காலத்தை நகர்த்தின.
அப்போதைக்கப்போது
மேகங்கள் நகர்ந்து
கண்ணாமூச்சி காட்டியது.
அந்தி வானில்
வெள்ளி நிறத்தில் பறவைகள்
வீடு திரும்பின.
நிகழ்வுகள் எதுவும் நிகழாமல்
கணங்கள் யுகத்தினுள் நுழைந்தன.
இந்த இரவில்தான்
அது நடக்க இருக்கிறது.
விழித்தால்தானே
விஷயம் தெரியவரும்.

● அன்பழகன்ஜி



ஒரு மழைக்கால ஞாயிறைப் போல்
சோம்பலேறிக் கிடக்கிறது
இன்றின் கிழக்கு

எலுமிச்சை மணக்கும்
தேநீர் என்பதொரு
கதகதப்பின் சொர்க்கம்

செல்ல நாய்க்குட்டியின்
தலைகோதினால்
நம் முகம் தாழச்சொல்லி நக்கும்

இன்னொரு தேநீரோடு
பக்கம் அமர்பவளின்
மடியில் சாய்கையில்
குட்டுபவள் தான்
அடுத்த முத்தம் அழுத்துபவளும்

● ஜா.பிராங்க்ளின் குமார்

ஒரு மரணத்தை
சுவைத்துக் கொண்டிருக்கிறேன்.

கையேந்தும் கரங்களுக்குள்
உறைந்து கிடக்கிறது
கண்ணீரின் கறை.

கவிதைகள் எழுதியவனை
கையேந்த வைத்திருக்கிறது
காலம்.

● ஆத்மாஜீவ்

எப்போதோ
பெய்த மழை
என் நிலத்தில்
இப்போதும் நீர்ப்பாய்ச்சுகிறது
நினைவுகளின் வேர்களில்
பூ பூப்பதை
நான் மட்டுமே அறிவேன்

● பாபு



அப்பாவின் சைக்கிள்
இருட்டை கிழித்துக்கொண்டு
கிருட்டுகிருட்டு–னு
வரும்...

இப்போதெல்லாம்
நிசப்தமாய் இருக்கிறது
அப்பாவின் சைக்கிள் ...

● மணிசங்கர்

மின்கம்பத்திலெரியும் கூட்டை
காப்பாற்றும் தீயணைப்புத்துறை
குச்சியோடு திரும்பும் பறவை
~

தளர்வான இணைப்பு
காற்றிலணையும் தெரு விளக்கு
வந்தமரும் பறவை
~

உழவனான மென்பொறியாளர்
இல்லத்தில் நெற்கதிர் தோரணம்
பசியாறும் குருவிகள்...
~

● ஸ்ரீவி.முத்துவேல்



உயிர்க்கொல்லிப் பறவைகள்
வட்டமிடுகின்றன வானத்தில்
ஏதேனும் ஓர் உயிர் கிடைக்குமா
இளமையோ
முதுமையோ
கூடுவிட்டு கூடுபாய்தல்
சிதைக்கப்பட்டஉடலைத்
தேடி உயிர் வருமா
கருணை
மனிதம்
சாத்தியமில்லையெனில்
இதயங்கள் எதற்கு
ஒவ்வொரு முறை குழந்தைகளின்
உறுப்புகளை சிதைக்கும்பொழுதெல்லாம்
தாயினத்தின்
வேர்கள் சிதைகிறது

நீ பிறந்த வழியையும்
நீயே சிதைக்கிறாய்
என்ன செய்யப்போகிறோம்
மனிதன்
உறுப்புகள்
பேராசைகள்
காம வெறி
போதை ஏதுமின்றி
பிறக்கப்போகும் காலத்திற்காக
காத்திருக்கப்போகிறோமா
சிதையும் தாய்களின்
கருப்பைகளைக் காப்பாற்றப்போகிறோமா?

● லக்ஷ்மி



நூலளவே நிலா
நெஞ்சத்தை முழுவதுமாய்
கொள்ளை கொள்ளுகிறது
பால் கிண்ணத்தில்

கோல எழில் வட்டநிலா
நுதலுக்கு உவமை சொல்கிறான்
பாக்களில் கவிஞன்

நதியில் உதிர்ந்தமலர்
காற்றின் அசைவில் கரை சேருகிறது
கல்லறை வாசலில்

● ஹைக்கூ ரகுமான்

உங்களுக்குப் பிடிக்காது
என்பதற்காக வேண்டுமானால்
வலி என்ற வார்த்தையை
புகுத்தவில்லை என் கவிதையில் ...

இதேபோல்
துரோகம் என்னும் வார்த்தையை
தவிர்ப்பேன் என்று மட்டும் நினைக்காதீர்கள்...

என்னைத் தெளிவு படுத்தியதே
இனியவர்கள் கொடுத்த துரோகம்தான் ..
துரோகத்திற்கு எப்படி
துரோகம் இழைப்பேன் நான்...!!

● கவிதைச் சிறுவன்



வெடித்த பலூனிலிருந்து
விடுபட்ட காற்று
காற்றோடு காற்றாக கலந்திருக்கலாம்
கவிதையில்
கடைசிச் சொல்லாய் அமர்ந்திருக்கலாம்
கண நேரத்தில்
கடலைக் கடந்திருக்கலாம்
பயணிக்கும் வாகன சக்கரத்தில் சேகரமாகி இருக்கலாம்
எதையும் அறியாமல்
காற்றைத் தேடி
காற்றில் அலைவுறுகிறது
பலூனுக்கு சொந்தக்கார
சிறுமியின் கை

● ச முகிலன்

## மௌனத்திற்கு பக்கத்தில்...

எந்தன் எண்ண அலைகளெல்லாம்
சுற்றி சுழலுகிறது
சுழல்காற்றில் சிக்கித் தவிக்கும்
சருகுகளென..
உன்னை சேரவியலாமல்...

உந்தன்
இதழ் திறவா மௌனங்களாலும்
விழிகளின் தீண்டாமையினாலும்
காதல் குடுவையில்
சிறைப்படுத்துகிறாய் என்னை...

புறக்கணிப்பும் நிராகரிப்புமே
உந்தன் ஆயுதங்களா என்ன?...
ஏன் இப்படி
அலட்சியம் எனும் தீக்கொண்டு
கொள்ளியிடுகிறாய் என் காதலுக்கு..

எவ்வளவு சிந்தித்தாலும்
தொண்டைக்குழியில் கல்லறை வாசம்
செய்யும் கவிதையெனவே..
சிக்கித் தவிக்கிறது எனது நேசம்..

சற்றே கருணைக் காட்டு...
மௌனத்திற்கு பக்கத்திலிருக்கும்
உந்தன் காதலை சற்றே தூசு தட்டு...
உயிர்த்தெழட்டும் நம் நேசம்...

● சசிகலா திருமால்

# படைப்பு நூல் நிலையம்



## கிடைக்கும் நூல்கள்

- படைப்பு பதிப்பக நூல்கள்
- அகநி பதிப்பக நூல்கள்
- யாளி பதிப்பக நூல்கள்
- பொள்ளாச்சி இலக்கிய வட்ட நூல்கள்
- வம்சி பதிப்பக நூல்கள்
- சுவடு பதிப்பக நூல்கள்
- வாசகசாலை பதிப்பக நூல்கள்
- வேரல் பதிப்பக நூல்கள்

## படைப்பு அரங்கம்



## *Facilities*

- *Capacity 90 - 100 (Persons)*
- *AC Hall with Audio system*
- *POP with Profile lights*
- *Tea / Coffee snacks place*
- *Projector*

**படைப்பு அரங்கம்**
**# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,**
**கார்ப்பரேஷன் காலனி தெரு,**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024**
**+91 73388 97788, 73388 47788**

padaipPU admin@padaippu.com www.padaippu.com